செ.வெ.எண்:1026 27/12/09

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்/ சென்னை–9
27–12–2009

## சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பத்திரிக்கை குறிப்பு

## சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அரங்கத்தின் துவக்க விழா

இந்திய சுற்றுலா பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அரங்கத்தை மாண்புமிகு செய்தித் துறை மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சர் மற்றும் தலைவர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் 27–12–2009 அன்று பகல் 11.00 மணிக்கு தீவுத் திடல், சென்னை–9 ல் திருமதி சூசன் மாத்யூ, இ.அ.ப., கூடுதல் தலைமை செயலர் மற்றும் துணைத் தலைவி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் திரு விக்ரம் கபூர், இ.அ.ப., உறுப்பினர் செயலர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்களின் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

மதறாஸ் பட்டின காலத்திலிருந்து தற்போதுள்ள பெருநகர் வரை வளர்ந்துள்ள பெருநகர் வளர்ச்சிகளையும் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள எதிர்கால வளர்ச்சிகளையும், பாரம்பரியமிக்க கட்டிடங்களின் புகைப்படங்கள், தற்போதுள்ள நகர காட்சிகளின் தொகுப்பு, சென்னைப் பெருநகரின் மாதிரி வடிவமைப்பு மற்றும் வரைபடங்களின் மூலம் வரலாற்று சிறப்புமிக்க இந் நகரத்தில் வசிக்கும் நகர மக்களுக்கு ஆர்வம் தூண்டும் வகையில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது முழுமைத் திட்டம் மற்றும் அரசு ஒப்புதல் பெறப்பட்ட விரிவான வளர்ச்சித் திட்டங்களின் நில உபயோக வரைபடங்களை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் இணைய தளத்தில் அணுகும் வசதியை மாண்புமிகு அமைச்சர் துவக்கி வைத்தார். ஒரு வருடத்திற்கு முன்பே ஒப்புதலளிக்கப்பட்டிருந்தாலும், இரண்டாவது முழுமைத் திட்டத்திலுள்ள அனைத்து 398 வரைபடங்கள் மற்றும் 56 விரிவான வளர்ச்சி திட்டங்களின் வரைபடங்களும் அனைத்து பாதுகாப்புகளுடன் கணிணியில் ஏற்றும் வகையில் எண்ணுறு வடிவில் இணையதளத்தில் பார்க்கும் விதமாக வரைபடங்களை மாற்றி அமைக்க வேண்டியிருந்தது என்று மாண்புமிகு தலைவர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கூறினார். வரைபடங்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திலுள்ள பூகோள தகவல் தொகுப்பு பிரிவால் தயாரிக்கப்பட்டுள்ளது. இணையதள வடிவமைப்பு சென்னையிலுள்ள தேசிய தகவல் மையத்தால் உருவாக்கி செயலாக்கப்பட்டுள்ளது. இந்த விவரங்களை, பொதுமக்கள் எழும்பூரிலுள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அலுவலகத்திற்கு வராமலேயே, தங்களுடைய இருப்பிடத்தில் இருந்தே சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் வலைதள முகவரி cmda chennai.gov.in அணுகி வரைபடங்களின் நகல்களை இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த தொடக்க விழாவில் தேசிய தகவல் தொடர்பு மைய மாநில தகவல் அலுவலர், திரு.பி. கிருஷ்ணபிரசாத் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

உறுப்பினர் செயலர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9